REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 83000

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 7உ புதன் (23—10—57) ★ ☆ வெளியூர்: ஐப்பசி 8உ வியாழன் (24—10—57) [இதழ் 112

ஆசியாவில் மக்கள் தொகை அதிகரிப்பு

★

புதுடில்லி, அக். 23—

ஆசியாவில் மக்கள் தொகை அதிகமாகி வருகிறது!

ஆண்டுக்கு 120 இலட்சம் வீதம் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது; இப்போது 80 கோடியை எட்டியுள்ளதாம்!

பல்கலைக்கழகங்கள் சுதந்தரமாக இயங்க முடியாதாம்!

சர்க்காரிடமிருந்து உதவி பெறுவதே காரணமாம்!

பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் கூறுகிறார்

சென்னை, அக். 21—

பல்கலைக் கழகங்கள் சுதந்தரமாக இயங்குவதா, வேண்டாமா என்பதுபற்றி சர்க்கார்களும், கல்வி நிறுவனங்களும் சண்டையிட்டுக் கொள்கின்றனவாம்!

இந்தச் சண்டை உடனடியாக நிற்க வேண்டுமென, பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவரான சி. டி. தேஷ்முக் வேண்டிக்கொண்டிருக்கிறாராம்!

"அரசாங்கத்திடமிருந்து தனது வளர்ச்சிக்காக நிதி உதவி பெற்றுத் தீரவேண்டியுள்ள ஒரு பல்கலைக் கழகம், 'சுயேச்சையான இயக்கம்' என்ற தனது கொள்கையைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்க முடியாது" என்றும் தேஷ்முக் கூறினாராம்!

"அதே நேரத்தில் சர்க்கார்களும், தாங்கள் நிதி உதவி செய்வதாலேயே, பல்கலைக் கழகங்கள்மீது கடுமையான ஆதிக்கம் செலுத்த முற்படுவதும் கூடாது" என்றும் அவர் கூறினாராம்!

"நிபுணர்களால் மட்டுமே சிறப்பாகக் கையாளக்கூடிய விவகாரங்கள் சில இருக்கின்றன; அதேபோல், கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களை அத்துறை நிபுணர்களே கையாளுவதுதான் சாலச் சிறந்ததாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென்னிந்திய கல்வி 'டிரஸ்ட்' தனக்குத் தந்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து தேனாம்பேட்டை பெண்கள் கல்லூரியில் பேசிய தேஷ்முக், மேலும் குறிப்பிட்டதாவது:—

"இன்று மத்திய சர்க்கார் சில பல்கலைக் கழகங்களை நடத்துகிறது; இவற்றின் விவகாரங்களில் தலையிடும் நோக்கம் மத்திய சர்க்காருக்கோ, மானியக் கமிஷனுக்கோ இல்லை; ஆனால், ஒரு பல்கலைக் கழகத்தின் விவகாரங்களை விசாரணைக் குழு ஒன்று நியமித்து ஆராயவேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது.

"எனவே, பல்கலைக் கழகங்களின் சுயேச்சைத் தன்மை பற்றி தத்துவ விசாரணையில் ஈடுபடுவதில் பயனில்லை.

"பல அதிகாரபீடங்களும் ஒன்றுக்கொன்று தகுந்த முறையில் ஒன்றுபட்டுத் திறந்த மனதுடனும், புரிந்து கொள்ளும் நோக்குடனும், விவேகமான சிந்தனையுடனும் நடந்துகொண்டாலன்றி, காரியங்கள் சரிவர நடைபெற முடியாது என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை."

பீகாரில் உணவுப் பற்றுக்குறை

மாதம் 80 ஆயிரம் டன் கோதுமை தருகிறது டெல்லி!

பாட்னா, அக். 21—

பீகாரில் பஞ்ச நிலைமை தலைதூக்குவதை ஒட்டி டெல்லி சர்க்கார், 80 ஆயிரம் டன் கோதுமை ஒதுக்கியிருப்பதாக மாநில உணவு மந்திரி தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஐந்து மாத காலமாக, மாதந்தோறும் 50 ஆயிரம் டன்கள் தான் பீகாருக்குத் தரப்பட்டு வந்தது என்றும், இம்மாதம் முதல் அந்த 'கோட்டா' அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்த மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

குளித்தலை விவசாயிகள் அறப்போர் வழக்குகள்

அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டன

குளித்தலை, அக். 21—

நங்கவரம் விவசாயிகள் 200 பேர்கள்மீது தொடரப்பட்ட 70 வழக்குகளையும் திரும்பப்பெற்றுவிட்டதாக திருச்சி மாவட்டக் கலெக்டரால் இன்று காலையில்எல்லா கோர்ட்டுகளுக்கும் சர்க்கார்வக்கீல்மூலம் உத்தரவு அனுப்பப்பட்டு வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன.

நங்கவரம் அறப்போரிலீடுபட்ட விவசாயிகளில் 200-க்கு மேற்பட்டவர்கள்மீது 70 வழக்குகள் போடப்பட்டு, குளித்தலை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும், கரூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும் குளித்தலை தாசில்தார் கோர்ட்டிலும் இதுவரை வழக்குகள் நடைபெற்றுவந்தன.

(இவ்வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று திருவண்ணாமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது நினைவிருக்கலாம்.)

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம் நங்கவரத்தில் பெரிய நிலப்பிரபுவை எதிர்த்து ஆகஸ்ட் 23-ம் நாள் அறப்போர் துவங்கியது; அந்த அறப்போர் செப். 9-ம் நாள் சமரசத்தில் முடிவுற்று வெற்றிபெற்றது; என்றாலும், 200-க்கு மேற்பட்ட விவசாயிகள் மீது பல்வேறு பிரிவின்

(4-ம் பக்கம் பார்க்க)

'தென்றல்' அலுவலகத்தில் போலீஸ் சோதனை

'இராமனின் மனப்போர்' கவிதையை கைப்பற்றிச் சென்றனராம்!

சென்னை, அக். 21—

கடந்த அக். 17-ந் தேதி சனியன்று மாலை 6-மணியளவில், மவுண்ட் ரோடிலுள்ள 'தென்றல்' அலுவலகத்தில் போலீசார் புகுந்து சோதனை நடத்தியிருக்கிறார்கள்.

சுமார் அரை டஜன் போலீசார் அலுவலகத்திற்குள் புகுந்து பத்திரிகையின் நிர்வாகியைச் சந்தித்து தங்களிடம் அலுவலகத்தைப் பரிசோதனை செய்யும் 'வாரண்ட்' இருப்பதாகவும், அலுவலகத்தைச் சோதனையிடப் போவதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

எதற்காக என்று நிர்வாகி கேட்டபோது, 31—8—57-ம் தேதிய 'தென்றல்' இதழில், சர்க்கார் கட்டளையை மீறி கவிதை ஒன்று பிரசுரமாகியிருப்பதாக போலீசார் கூறினராம்!

அந்த இதழில், 'சரிதா' எனும் இந்தி இதழில் பிரசுரமான 'இராமனின் மனப்போர்' என்ற கவிதையின் தமிழ் மொழி பெயர்ப்பு (தோழர் ந. அலி என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது) வெளிவந்திருந்தது.

"இந்தக் கவிதையைப் பிரசுரிக்கக்கூடாது என்று சர்க்கார் எங்களுக்கு உத்தரவு எதுவும் தரவில்லை" என்று நிர்வாகி கூறியிருக்கிறார்.

போலீசார், 'கெஜட்'டில் பதிவாகியிருப்பதாகக் கூறி, அந்தக் கவிதை அச்சான இதழ்கள் மீதமிருப்பதை வேண்டுமெனக் கேட்டிருக்கின்றனர். நிர்வாகி, மீதமிருந்த 16 இதழ்களையும் தந்திருக்கிறார். போலீசார் அலுவலகத்தைச் சோதனையிட்டு, வேறு இதழ்கள் இல்லை என்பதை அறிந்துகொண்டு, கவிதை எழுதியவரின் கையெழுத்துப் பிரதியும் வேண்டும் எனக் கேட்டனராம்; அதையும் தேடி எடுத்துத் தந்திருக்கிறார் நிர்வாகி.

இந்த நேரத்தில் அலுவலகம் வந்த 'தென்றல்' ஆசிரியர் கண்ணதாசன் அவர்களிடம், போலீசாரும், நிர்வாகியும் நடந்ததைக் கூறியிருக்கின்றனர்.

சோதனைக்கு ஒத்துழைத்தமைக்கு போலீசார் நன்றி தெரிவித்துவிட்டு வெளியேறினராம்.

வடநாட்டு அகதிகள் சண்டித்தனம்?

வேலை செய்ய மறுப்பு?

கல்கத்தா, அக். 23—

மேற்கு வங்கப் பகுதியில் அகதிகள் குடியிருக்கவோ, பயிற்சி பெறவோ மறுத்தால், அவர்களுக்குத் தரப்படும் ரொக்க மானியத்தை நிறுத்துமாறு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏற்கெனவே வேலையில் அமர்ந்து ஊதியம் பெறுபவர்களுக்கும் மானியம் நிறுத்தப்படுகிறது.

10 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓடிவருவோர் குறையவில்லையே!

மேற்கு வங்கக் காங்கிரசின் கவலையும் யோசனையும்!

கல்கத்தா, அக். 21—

மேற்கு வங்கத்திற்கு, கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகள்பற்றி மாநிலக் காங்கிரஸ் கட்சி விவாதித்தது என்றும், அப்போது, ஒரு காலவரை குறிப்பிட்டு, அதற்குப்பின் ஓடிவருகிறவர்கள் அகதிகளாகக் கருதப்படமாட்டாது என்று விதிக்கவேண்டும் என்றும், சர்க்கார் அப்படிப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு தரும் வேலையில் ஈடுபடக்கூடாது என்றும் யோசனை கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய, மாநில அகதி மந்திரிகளான மேகர்சந்த் கன்னா, பி. சி. சென் ஆகியோரும் இந்த யோசனையைத் தனிப்பட்ட முறையில் ஆதரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

மாநில முதன்மந்திரி டாக்டர் பி. சி. ராயும் கூட்டத்திலிருந்தாராம்.

எல்லையை அடைத்துவிடக் கூடாது என்றும், ஆனால், தேதி நிர்ணயித்து, அதன் பிறகு வருகிறவர்கள் அகதிகளாகக் கருதப்பட மாட்டார்கள் என்று அறிவிக்க வேண்டுமெனவும் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் மூலம் அல்ல—யோசனையாக வெளியிட்டிருக்கிறதாம்!

பிரிவினை நடந்து 10 ஆண்டுகள் ஆகியும் பலர் ஓடிவந்து கொண்டிருக்கின்றனர் என்றும், அவர்கள் எல்லாம் அகதிகளாகக் கருதப்பட முடியாது என்றும், அப்படிக் கருத வேண்டுமென பிரிவினைக் கால உடன்பாடு எதுவும் கூறவில்லை என்றும் காங்கிரஸ் கருதுகிறதாம்.

மைசூர் அபிவிருத்தித் திட்டங்கள்

'நிதி நெருக்கடி காரணமாகக் கைவிடப்பட மாட்டாது'

முதன் மந்திரியின் உறுதி

பெங்களூர், அக். 21—

நிதி நிலைமை நெருக்கடி காரணமாக, உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் எதையும் கைவிடும் நோக்கம் தமது சர்க்காருக்கு இல்லை என மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பா கூறியிருக்கிறார்.

'அது மட்டுமல்ல; இன்னும் ஒன்றரை ஆண்டுக்குள் மாநிலத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முழுவதுமாக முடியும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சந்தேகமே கிடையாதாம்!

புதுடில்லி, அக். 23—

'கோளத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை ஓரளவுக்குக் கவலையைத் தருவதாக உள்ளது என்பதில் சந்தேகமே கிடையாது' என்று நேரு தெரிவித்துள்ளார்.

நம் நாடு

சென்னை 23—10—57 புதன்

பணம் விழுங்கும் திட்டம்!

சென்ற மே திங்களில் கடல் வழி இங்கு புகுந்த நச்சுக் காய்ச்சல், நல்ல உடற்கட்டு உடையவர்களையும் வாட்டி வருத்திவிட்டது. பல்லாயிரக் கணக்கில் மக்கள் அக்காய்ச்சலால் வேதனைக்குள்ளாயினர். இருந்தாலும் அக்கொடு நோய், தாக்கின எவரையும் கொன்றது கிடையாது.

ஆனல், மீண்டும் ஒருமுறை, மறைந்த அந்த நச்சுக் காய்ச்சல் இங்கு திரும்பிவரும்; அப்பொழுது அக்காய்ச்சலால் தாக்குறுபவர், இப்பொழுது போல் வன்மை குறைந்து, உடல் நலம் கெட்டு, ஒடுங்கிக் கிடந்து உயிர் பிழைத்தது போன்றல்லாது, தாக்கினவுடன் செத்துமடிவர் என்று விளக்கமும் அளிக்கப்பட்டது.

இந்த விளக்கத்தைக் கேட்டு, இரண்டாம் முறையாக நுழையப் போவதாகச் சொல்லப்படும் அந்த நச்சுக் காய்ச்சல் எப்பொழுது வருமோ, எவர் எவர் உயிரைக் குடிக்குமோ என்றெல்லாம் மக்கள் எண்ணலாயினர்; ஏக்கம் கொள்ளவும் ஆயினர். அத்தகு அச்சத்தின் விளைவாக எவர் எவர் எந்தெந்தப் பிணிக்கு பலியாயினரோ யார் அறிவர்?

பொதுமக்களின் நிலை இதுவென்றால், உலக அரசுகள் பலவும் - அது வல்லரசானுலும் சிற்றரசானுலும் - அக்கொடுங் காய்ச்சலை, மக்களைத் தீண்டுவதற்குமுன்னரே தடுத்து நிறுத்தும் ஆராய்ச்சியில் ஈடுபடலாயின. உலகில் உள்ள மற்ற அரசுகள் பல, அம்முயற்சியில் ஈடுபட முன்வரும்பொழுது, நமது பேரரசு மட்டும் அந்த நற்பணியை மேற்கொள்ள முனையாது இருக்குமா? இந்தியப் பேரரசும் அக்கொடிய காய்ச்சலைத் தடுத்து நிறுத்தும் மருந்து காணும் திருப்பணியில் தீவிரமாக ஈடுபடலாயிற்று.

அத்தகைய சிறந்த ஆராய்ச்சியை இந்தியப் பேரரசு மேற்கொண்டதில் வியப்புமில்லை— அறிவுக்கு ஒவ்வாத எதுவுமில்லை. அம்முயற்சி வரவேற்கத்தக்கது—பாராட்டத்தக்கது.

ஆனல், அந்த ஆராய்ச்சியின் முடிவு என்ன ஆயிற்று? நச்சுக் காய்ச்சல் தடுப்பு முறை மருந்து கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதா? இந்த நியாயமான கேள்வி இரண்டுக்கும் விடை கண்டாக வேண்டும்

நச்சுக்காய்ச்சல் தடுப்புமுறை மருந்து கண்டுபிடிக்கும் பொறுப்பான பணியினை, பூனை நகரில் உள்ள இராணுவ மருத்துவக் கல்லூரியின் பொறுப்பில் இந்தியப் பேரரசு ஒப்படைத்தது. அக்கல்லூரியும் ஒரு மருந்தைக் கண்டுபிடித்தது.

ஆனல் அந்த மருந்தோ, அது எதற்காகப் பயன்படும் என்று நம்பி உற்பத்திச் செய்யப்பட்டதோ, அதற்குக் கடுகத்தனையும் பயன்படவில்லை. அம்மருந்தைக் கண்டுபிடித்த கல்லூரியே, அம்மருந்தின் பயனற்றத்தன்மையைத் தெளிவாகக் கூறி இருக்கிறது. அதாவது, 'நச்சுக் காய்ச்சல் தொத்துநோய் தோன்றினலும் அம்மருந்துக்குத் துளி மதிப்பும் கிடையாது' என்பதே தன்னல் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பு முறை மருந்து பற்றி, பூனை இராணுவ மருத்துவக் கல்லூரியே தந்துள்ள தீர்ப்பாகும்.

நன்கு பரீட்சித்துப் பார்க்காமல் இந்தத் தீர்ப்புக்கு மேற்படி கல்லூரி வரவுமில்லை. பத்தாயிரம் நபர்களுக்கு இத்தடுப்பு முறை மருந்து, ஊசிமூலம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனல் பயன் எதுவும் ஏற்படவில்லை.

இந்த நிலையில், அறிவுடையவர்கள் என்ன செய்வார்கள்? பணச் செலவைக் கருதி முயற்சியைக் கைவிட்டு விடுவார்கள் அல்லது பணச் செலவைப் பொருட்படுத்தாது மேலும் தீவிரமாக முயற்சிப்பார்கள். ஆனல், பூனை இராணுவக் கல்லூரியோ, மேற்குறித்த இரண்டு அறிவுடைச் செயலையும் பின்பற்ற முந்தவில்லை. விசித்திரமாக நடந்துகொள்ள முன்வந்திருக்கின்றது.

நச்சுக் காய்ச்சலைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் துளியுமில்லாதது எனத் தன்னலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள 'தடுப்புமுறை மருந்தை'யே தரம் வாய்ந்த மருந்தாகக் கொண்டு, பெரும் அளவில் உற்பத்திச் செய்வது எனப் பூனை இராணுவக் கல்லூரி தீர்மானித்து விட்டது. அத்தீர்மானம் ஏட்டளவிலும் இல்லை. தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

நச்சுக் காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்புமுறை மருந்து ஒன்றைக் கண்டுபிடிப்பதில் பூனை இராணுவக் கல்லூரி மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவு முழுத் தோல்வி! அதற்கெனச் செலவழிக்கப்பட்டுள்ள பணம—ஒவ்வொரு புதியகாசும் பாழ்!

இருந்தாலும், உருப்படாத மருந்தைத் தடுப்பு முறை மருந்து எனப் பெரிய அளவில் தயாரிக்கும் பயனற்ற பணியினை மேற்படி மருத்துவக் கல்லூரி தொடர்ந்து செய்துவருகிறது. இவ்வாறு பணத்தைப் பாழாக்கும் மேற்படி கல்லூரியின் வீண் பணிக்கு இந்தியப் பேரரசும் ஒப்பி இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்படி பொதுமக்கள் வயிறு எரிய எரிய, அவர்களைக் கசக்கிப் பிழிந்து, வயிறு எரிய எரியக் கிட்டியிட்டு வசூலித்துவரும் பணத்தை, இந்தியப்பேரரசு இப்படியா பாழடிக்க வேண்டும்? இது என்ன திட்டமோ? இது என்ன ஆராய்ச்சியோ?

உலக நாடுகள் சபையின் உறுப்பாக இருந்துவரும் உலக மருத்துவ மன்றம், நச்சுக் காய்ச்சலைத் தடுத்துநிறுத்துவதற்கான ஆற்றல் மிக்க 'தடுப்பு மருந்து' ஒன்றைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. உலக மருத்துவ மன்றமே மேற்கொண்டுள்ள ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டிய இன்றியமையாமை இந்தியப் பேரரசிற்கு ஏற்படவே இல்லை. உலக மருத்துவ மன்ற ஆராய்ச்சி உலகத்துக்குப் பொதுவானதாகும். அவ்வாராய்ச்சியின் பயனுள்ள முடிவை இந்தியப் பேரரசு பயன்படுத்திக் கொள்ளலாம்; அதைத் தடுப்பாரில்லை.

உண்மை இவ்வாறு இருக்க, இந்தியப் பேரரசு இத்துறையில் தனி ஆராய்ச்சியில் ஈடுபட்டது எதுபற்றியோ? வெறும் பகட்டுக்கா? வீண் பெருமைக்கா?

சட்டி சுட்டது கைவிட்டது என்று இருந்துவிட மனமில்லாமல், உருவாக்கிய உருப்படாத மருந்தை மேலும் அதிகமாக உற்பத்திச் செய்யும் பூனை கல்லூரியின் அறியாமையையும், பிடிவாதத்தையும் இந்தியப் பேரரசு தடுத்து நிறுத்த முன்வராதது ஏன்? இந்தியப் பேரரசின் போக்கு புரிந்துகொள்ள முடியாத பெரும் புதிராக இருக்கிறது.

இதுபோன்றேதான், உருப்படாத சூரிய அடுப்பை உற்பத்திச் செய்வதாகச் சொல்லி, அவ்வகையில் பல லட்ச ரூபாய்களை விரயக்கிறது இந்தியப் பேரரசு. 'சுண்டைக்காய் கால் பணம்—சுமை கூலி முக்கால் பணம்' என்ற மொழிபோலத்தான் இந்தியப் பேரரசின் நடைமுறை அமைந்திருக்கின்றது! இந்தியப் பேரரசு மேற்கொள்ளும் இத்தகைய ஆராய்ச்சிகளை பணம் விழுங்கும் திட்டம் என்றுதான் கூறவேண்டும்.

இந்தியாவில் உணவு நெருக்கடி படுமோசமாகிக் கொண்டிருக்கிறதே!

பருவ மழை தவறிவிட்டதே! பஞ்சம் தலைகாட்டுகிறதே!

பண்டித நேரு ஓலம்

புதுடில்லி, அக். 21—

இந்தியாவில் உணவு நிலைமை படுமோசமாக இருந்துவருகிறது என்பதைப் பண்டித நேரு ஒப்புக் கொண்டிருக்கிறர்

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், 'உணவு நெருக்கடியைச் சமாளிக்க அனைவரும் கட்சி பேதங்களையும் மறந்து முன்வர வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டிருக்கிறர்.

"இந்தக் கணத்தில் என் சிந்தனையை அலைக்கழிப்பது எல்லாம் உணவுப் பிரச்சினைதான். உணவுப் பற்றுக்குறை, பருவ மழை தவறியதன்காரணமாக மிகுதியாகிக்கொண்டுவருகிறது. வெள்ளம் தீங்கு பயப்பதுதான் என்றுலும் அதனல் நலன்கள் இல்லாமல் இல்லை; நல்ல மகசூல் இருக்கும். ஆனல் மழையே இல்லாமற் போவது மிகவும் கடினமான நிலையை உண்டாக்கிவிடுகிறது. இந்த முறை நல்ல மகசூல் இருக்குமென நினைத்தோம்; ஆனல் செப்டம்பர், அக்டோபரில் மழை இருந்திருந்தால் நம்பிக்கை வீண் போயிருக்காது" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறர்.

"பீகார், ஒரிசா, மத்தியப் பிரதேசம், மராட்டியம் முதலிய பிரதேசங்களில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது; உள்ள தகவல்களை எல்லாம் மக்களிடத்தில் தருகிறேம். மூடிமறைத்துப் பேச வேண்டிய விஷயமல்ல இது; எல்லோரும் ஒத்துழைப்பர் என நம்புகிறேம்" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறர்.

பனஞ்சாறு காய்ச்ச சூரிய வெப்பம்

சென்ற பத்து வருடகாலத்தில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சூரியசக்தியை விஞ்ஞான-தொழில் உபயோகங்களுக்குப் பயன்படுத்த முடியுமா என்று பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

புதுடில்லி பௌதிக ஆராய்ச்சிசாலை பனஞ்சாறு காய்ச்சுவதற்கு சூரியசக்தியை உபயோகிக்கிற சாதனம் ஒன்றை உருவாக்கியிருப்பது இத்தகைய முயற்சிகளில் ஏற்பட்டுள்ள பல வெற்றிகளில ஒன்ருகும்.

இந்தியாவில் பேரீச்சைமரம், தென்னை, பனை, கூந்தல்பனை ஆகிய நான்கு விதமரங்கள் பயிராகின்றன; மொத்தம் 15-கோடி மரங்கள் உள்ளன. சாதாரணமாக சுண்ணும்பு தடவிய பானையில் சாறு சேகரிக்கப்பட்டு, 20-மணி நேரத்துக்குள் குழிவில்லாத பரந்த வாணலிகளில் காய்ச்சப்பட்டு வெல்லம் அல்லது சுத்திகரிக்கப்படாத சர்க்கரை தயாரிக்கப்படுகிறது. பனை மரங்கள் விளைகிற இடங்களில் விறகு அதிகம் கிடைக்காமல் சுள்ளி, சருகு முதலியவைகளையே எரி பொருளாக உபயோகிக்க வேண்டியிருக்கிறது. உயர் ரக உலைகளில் விறகு, நிலக்கரி, கோக்கரி முதலியன உபயோகிக்கப்படுகின்றன; ஆனல் பெரும்பாலான இடங்களில் சூரியவெளிச்சம் தாராளமாக இருக்கிறது.

வட நாட்டை வளமாக்கத் திட்டம்

ரூ. 48 கோடி செலவிட முடிவு

பாட்னு, அக். 21—

இந்தியப் பேரரசும், நேபாள அரசாங்கமும் காந்தக் அணை திட்டத்திற்கு உடன்பாடு செய்து கொண்டுள்ளதாம்; இத்திங்கள் இறுதியில் உடன்பாடுபூர்த்தியாகுமாம்.

நேபாளத்தில் ஓடும் காந்தக் ஆற்றின் தண்ணீரைத் திருப்பி, பீகார், உத்திரப் பிரதேசம், நேபாளம் ஆகிய பகுதிகளில் 30 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்படுமாம்; இதற்காக ரூ. 48 கோடி செலவிடப்படுமாம்!

அணை கட்டப்பட வேண்டிய பகுதி நேபாளப் பகுதியில் உள்ளதாம். இந்த இடத்தை பீகார் மாநில பொறியியல் நிபுணர்கள் தேர்ந்தெடுத்தனராம்.

இரு அரசாங்கப் பிரதிநிதிகளும் கலந்து பேசி திட்டத்தை உருவாக்கியுள்ளனராம்.

கலெக்டர்கள்மாநாட்டின் சோகக் கதை!

சென்னை, அக். 21—

சென்னை மாநிலத்தின் மாவட்ட அதிகாரிகள் (கலெக்டர்) மாநாட்டில் அரசாங்க செயலாளர்கள், இலாகா பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

மாநிலத்தில் இரும்பு—உருக்கு பற்ருக்குறை பற்றி அவர்கள் பேசியுள்ளனர்.

சென்னை மாநிலத்தில் அரசாங்கம் கட்டும் கட்டிடங்களில் 25 சதவிகிதக் கட்டிடங்களுக்குச் சிமெண்டு இல்லையாம்!

எனவே, சுண்ணும்பையும், காரையையும் பயன்படுத்திக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று மாநாடு முடிவு செய்துள்ளது.

பட்டினி கிடக்க நேர்ந்தாலும் சாவைத் தழுவ நேரிட்டாலும்....

திட்டத்தைக் கைவிடமாட்டாராம்- பண்டித நேருவின் வீராப்பு

அயல்நாட்டுக் கொள்கை அசோகன் காலத்திலிருந்து வடித்தெடுக்கப்பட்டதாக டம்பம்!

புதுடில்லி, அக். 21—

அசோகச் சக்கரவர்த்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதே பண்டிதரின் அன்னியநாட்டுக் கோள்கையாம்!

திட்டவட்டமாகத் தமது வெளிவிவகாரக் கொள்கையைப் பண்டிதர் விளக்கியிருப்பதைப் பாருங்கள்!

"வானமே இடிந்து விழுவதானுலும், நமது இப்போதைய வெளி விவகாரக் கொள்கையை நாம் கைவிடமாட்டோம்!

"வல்லரசுக் கோஷ்டிகளில் சேராமலிருப்பது என்பது, நமது அடிப்படைக் கோட்பாடு!

"இந்தியாவில் அமைகிற எந்த ஒரு சர்க்காரும், அது புத்திசாலித்தனமாக இருக்க வேண்டுமானல், நாம் இன்று கடைப்பிடிக்கும் இந்தக் கொள்கையைத்தான் கடைப்பிடித்தாகவேண்டும்!

"கடந்த இரண்டு தலைமுறைகளாக நாம் சிந்தித்ததின் பயனுக விளைந்ததே நமது அன்னிய நாட்டுக் கொள்கையென நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கொள்கை, அசோக சக்கரவர்த்தியின் காலததிலிருந்து வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது!

"எங்கோ ஏதோ ஒரு சம்பவம் நடைபெறுகிறது என்பதற்காக இதனை மாற்றிக்கொள்ள மாட்டோம."

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி அவர் காட்டியுள்ள வீராப்பைக் கீழே காணுங்கள் :—

"அன்னியச் செலாவணி கிடைக்காவிட்டால், திட்டம் தோல்வியுருதா என்று கேட்கிருர்கள்; இப்படிச் சில நாடுகள் உதவ மறுத்துவிட்டதாலேயே இந்தியா தொடர்ந்து திட்டத்தை நிறைவேற்ருது என்று எண்ணுவது தவருனதாகும்!

"தேவையானல் நாம் பட்டினி கிடப்போம்! சாவைக்கூடத் தழுவுவோம்! என்ருலும், திட்டத்தை விடமாட்டோம்!"

'பௌண்டன் பேனு' மை தயாரிக்க புதிய திட்டம்

பலன் கிடைக்குமென்று இந்திய சர்க்கார் எதிர்பார்க்கிறது

'பௌண்டன் பேனு' மை தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய சர்க்கார் சிறு தொழில்கள் நிறுவனம் உருவாக்கியிருக்கிறது.

இந்தியாவில் 'பௌண்டன் பேனு' மை தயாரிப்பு அதிகரித்த போதிலும் ஓரளவுக்கு இன்னும் அது இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

1955-ல் உற்பத்தி 7,43,000 டஜன் புட்டிகள்; 1953-ல் 5,33,600 டஜன் புட்டிகள். இறக்குமதியை அவசியமில்லாமல் செய்வதற்காகவே உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்யப்படுகிறது; இத்திட்டம் பலன் தரும் என்றும் நம்பப்படுகிறது.

தி. மு. கழகத்தின் அரிய சாதனைகள்

டி. எஸ். ஆதிமூலம் எம். எல். ஏ. விளக்கம்

5—10—57-ல், கீழப்பாவூர் வட்ட அடைக்கலப்பட்டினம் தி. மு. கழகத் தோழர்கள் நடித்த 'பண்ணையார்' நாடகத்திற்குத் தலைமைதாங்கிய தோழர் டி. எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல் தோன்றி மண் தோன்றாக் கால முதல் ஆங்கிலேயர் ஆட்சிவரை 'இந்தியா' ஒரே நாடாக இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. ஏனெனில், பலதரப்பட்ட—பல மொழி பேசும் மக்களைக் கொண்டது இந்தியத் துணைக்கண்டம்; அப்படிப்பட்ட நாடு 'ஏக நாடாக' இருப்பது சாத்தியமாக முடியாது. இதை, பல ஆதாரங்களோடு எடுத்தியம்பி தென்னாடு தனித்தியங்க வேண்டுமென வாதாடுகிறது, அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம்."

"தனி நாடு கேட்கும் அண்ணாவின் தலைமையில் பல இலட்சம் இளைஞர்கள் அணிவகுத்துவிட்டார்கள்; ஆகவே, தென்னாடு பிரிந்துவிடுமோ என ஐயுற்றுத்தான் பிரதமர் நேரு சில வேளைகளில் தென்னகம் வருகிறாரே தவிர, இங்குள்ள காங்கிரசாருக்குப் பயந்தோ, அல்லது காங்கிரஸ் ஆட்சியாளர்களின் வேண்டுகோளின்படியோ இங்கு வரவில்லை; மேலும், டெல்லி அரசிடமிருந்து ஒரு சில சலுகைகள் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கின்றன என்றால், அது சட்டமன்றத்தில் 15 தி. மு. கழகப் பிரதிநிதிகள் இருப்பதால்தானே தவிர, ஆட்சியாளர்களின் திறமையால் அல்ல என்று '15 பேர் என்ன சாதிப்பார்கள்?' என்று கேட்கின்றவருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"முன்பெல்லாம் சட்டமன்றம் கேலிக்குரியதாக — வெற்றிலை போடலாமா, புகை பிடிக்கலாமா என்ற கேலிப் பேச்சுக்களுக்கு இடமாக இருந்தது.

"ஆனால் தி. மு. கழகப் பிரதிநிதிகள் சட்டமன்றம் நுழைந்த பின் உண்மையான சட்டமன்றமாகக் காட்சியளிக்கிறது; ஏனெனில், தி. மு. கழக உறுப்பினர்கள் பொறுப்போடு கண்ணியமாகப் பேசுகிறார்கள்.

"முன்பெல்லாம் பெரும்பான்மை காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வருவதே கிடையாது; ஆனால் தி. மு. கழகப் பிரதிநிதிகள் சட்டமன்றம் வந்தவுடன் பெரும்பான்மை காங்கிரசார் அவையிலேயே காட்சியளிக்கிறார்கள்.

"தென்னாட்டை விடுவிக்கவும், தமிழ் மொழியைக் காக்கவும், திராவிட மக்களின் உரிமையை நிலைநாட்டவும் தி. மு. கழகம் பாடுபட்டுவருகிறது; ஆகவே, மக்கள் தி. மு. கழகத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மணக்கால் தி. மு. கழக துவக்க விழா

மதியழகன் கலந்துகொண்டார்

5—10—57 மாலை 4½ மணிக்கு, மணக்கால் தி. மு. க. கிளைத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டம் நடைபெறுவதற்கு முன், அரியலூர் தோழர் கி. சிவபெருமாள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

பிறகு, தோழர் எம். முத்து தலைமையில் கூட்டம் துவங்கியது.

தலைவர், கழகத் துவக்கத்தின் அவசியத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்.

தோழர் கி. சிவபெருமாள், மூங்கில்பாடி தோழர் வடிவேல், மேலமாத்தூர் மருதமுத்து, குழந்தைவேல், சிங்காரம் ஆகியோர் பேசிய பின்னர், பலத்த கை தட்டலுக்கிடையே தோழர் கே. ஏ. மதியழகன அவர்கள் பேச எழுந்தார்.

தோழர் மதியழகன் அவர்களுக்கு அவ்வட்டார மக்கள் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவித்தனர்.

பின்னர், மதியழகன் அவர்கள், கழகத்தின் நோக்கங்கள், கொள்கைகள், கழகம் ஆற்ற வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து மிக விளக்கமாக கருத்து விருந்தளித்து தி. மு. க. கிளையைத் துவக்கிவைத்தார்கள்.

தலைவர் நன்றிகூற கூட்டம் இரவு 9 மணியளவில் இனிது முடிந்தது.

அரியலூரில்:

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் அரியலூர் புகைவண்டி நிலயத்தை வந்தடைந்ததும், அரியலூர் வட்ட தி. மு. கழகச் செயலாளர், பொதுமக்கள், அனுதாபிகள் அனைவரும் கூடிநின்று வரவேற்றனர். பல தொழிற் சங்கங்கள் மாலையிட்டு வரவேற்றன.

ஊராண்மைக் கழகத் தேர்தல்கள்

கழகத் தோழர்கள் வெற்றி

★

திருவதிகை:

பண்ணுருட்டிக்கு அடுத்த திருவதிகை கிராம பஞ்சாயத்துத் தேர்தலில் (15-10-57) பண்ணுருட்டி நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினரான தோழர் டி. எஸ். அண்ணாமலை அவர்கள் 175 வாக்குகள் அதிகம் பெற்று 1-வது வார்டில் வெற்றிபெற்றார். இந்த வார்டில் இவருடன் 5 பேர் போட்டியிட்டனர்.

தொட்டியம்:

28—9—57-ல் நடைபெற்ற தேர்தலில் கழகத் தோழர் இரா. க. செல்லபிள்ளை, தொட்டியம் ஊராண்மைக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மற்றும் நான்கு கழகத் தோழர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

வண்டிப்பெரியார்:

15—10—57-ல் நடைபெற்ற வண்டிப்பெரியார் பஞ்சாயத்து 15-வது வார்டு இடைத் தேர்தலில் போட்டியிட்ட தி. மு. கழகத் தோழர் குருசுமாது அவர்கள் தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் சங்கம், பீர்மேடு தேயிலைத் தோட்டத் தேசியத்தொழிலாளர் சங்கம்ஆகிய தொழிற் சங்கங்களின் அமோக ஆதரவு பெற்று, எதிர்த்து நின்ற கம்யூனிஸ்டுக் கட்சி அபேட்சகரைவிட 803ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

மொச்சகொட்டாம்பாளையம்

தி. மு. க. பொதுக்கூட்டம்

15—10—57 மாலை 7 மணிக்கு மொச்சக்கொட்டாம்பாளையம் தி. மு. க. துவக்க விழாப் பொதுக்கூட்டம் வழக்கறிஞர் அம்மையப்பன் தலைமையில் துவங்கியது; தோழர் எம். கே. கரிகாலன் கழகக் கொடியை உயர்த்தினார்; தோழர்கள் மு. குழந்தைவேல், நாவரசன், பி. இராசமாணிக்கம், என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் முத்துசாமி அவர்களின் ஆண் மகவுக்கு என். எஸ். இளங்கோ அவர்களால் 'செங்குட்டுவன்' எனப் பெயர் சூட்டப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டுள்ளது.

பண்ணுருட்டி

நகர வாக்காளர்களுக்கு:

"பண்ணுருட்டி நகர எல்லைக்குள் இருக்கும் தி. மு. கழகத் தோழர்களும் பொதுமக்களும் தங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமலிருந்தாலும், விடுபட்டிருந்தாலும் உடனடியாகத் தாசில்தாரிடம் கிடைக்கும் விண்ணப்பத் தாளில், தங்கள் பெயரை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ந. இராசகோபால் அறிவிக்கிறார்.

'மௌபரீஸ் சாலைக்கு திரு.வி.க. பெயரை இடுக'

திரு. வி. க. நினைவுநாளில் கோரிக்கை

17—10—57 மாலை இராயப்பேட்டையிலுள்ள பாலபக்தஜன சபைக் கட்டிடத்தில் திரு. வி. க. நினைவுநாள், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது.

இந்நினைவு நாள் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி, திரு. வி.க.வின் நூல்களை எளிய விலையில் மலிவாக வெளியிட வேண்டும் என்றும், வரலாற்றுக்குப் பயன்படக்கூடிய திரு. வி. க.-வின் எழுத்தோவியங்களைத் தக்கார்களைக்கொண்ட குழு ஒன்று தொகுத்துதர வேண்டும் என்றும் பேசினார்.

திரு. வி. க. அவர்களுடன் நெருங்கிப் பழகிய திரு.வெ. சாமிநாத சர்மா அவர்கள் திரு. வி. க.-வின் குணநலன்கள், அவர் யாவரிடமும் நடந்துகொண்ட போற்றத்தக்க முறைகளைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

பிறகு, திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள், பெண்ணின் பெருமைக்காக திரு.வி.க. எவ்வாறெல்லாம் போராடினார் என்பதை விளக்கிப் பேசினார்.

திரு. ம. பொ. சி. அவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிக்கும் திரு. வி. க.-வின் சீரிய குணங்களை விளக்கிக் கூறினார்.

கூட்டத்தில் திரு.வி. கல்யாண சுந்தரனார் நெடுங்காலம் வாழ்ந்துவந்த இராயப்பேட்டையிலுள்ள மௌபரீஸ் நெடுஞ்சாலைக்கு, 'திரு. வி. கல்யாண சுந்தரனார் நெடுஞ்சாலை' எனப் பெயரிட்டு அழைக்க வேண்டுமென்று ஒருமனதான கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு வந்திருந்த சென்னை நகரமன்ற உறுப்பினர், திரு. கமலக்கண்ணன் அவர்கள், இதற்காகத் தம்மாலியன்ற உதவிகளை உடன்செய்வதாகவாக்களித்தார்.

தமிழகத்தில் அரசியல் விழிப்பை உண்டாக்கிய தலைவரும் அரசியல் மேடையில் நல்ல தமிழைப் பெருவழக்கிற்குக் கொண்டுவந்த சிறந்த பேச்சாளரும், பத்திரிகைத் துறையில் தூய எளிய தமிழை வழக்கத்திற்கு கொண்டுவந்த பேராசிரியரும், மாற்றாரும் போற்றிவந்த குணக்குன்றுமான திரு. வி. க.-வின் அருமை பெருமைகளை மயிலை—சீனி. வேங்கடசாமி எடுத்துரைத்தார்.

விருதம்பட்டு பீடித் தொழிலாளர் கூட்டம்

9—10—57-ல் விருதம்பட்டு பீடித் தொழிற் சங்க செயற்குழுக் கூட்டம் தோழர் வி. எம். துரைசாமி தலைமையில் நடைபெற்றபோது, பேரணம்பட்டு பீடித் தொழிலாளர் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் நடைபெறப்போகும் சட்டசபைக் கூட்டத்தில் பீடித் தொழிலாளருக்கு உடனடியாக பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று தொழில் அமைச்சரை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

சிலை வணக்கம் பெருகவேண்டுமாம்!

அமைச்சர் கக்கனின் அருள்வாக்கு!

சேலம், அக். 18—

"கடவுளை வணங்குதல் மிக அவசியம். ஒரு சிலர் கடவுளே இல்லை என்றும், கடவுளை முன்னால் கொண்டு வந்து நிறுத்தினால்தான் தாங்கள் நம்புவதாகவும்கூறுகின்றனர். கடவுள்பக்தி உள்ளவர்களுக்குத் தான் மனச்சாட்சி இருக்கும்; கடவுள் பக்தி இல்லாதவர்களுக்குத் மனச்சாட்சி இருக்காது. ஆகவே, ஒவ்வொருவரும் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருக்கவேண்டும். விக்கிரக ஆராதனை நாட்டிற்கு மிகமிகத் தேவை."

அமைச்சர் பி. கக்கன், மேட்டூரை அடுத்த கொளத்தூரில், தேசிய விஸ்தரிப்புத் திட்ட காரியாலயக் கட்டிடத்திற்கு 17-ந் தேதியன்று கால்கோள் விழா செய்து விட்டுப்பேசுகையில் இவ்வாறு கூறினார்.

மேட்டூரிலிருந்து கொளத்தூருக்குச் செல்லும் சாலையில் மொத்தம் ரூ. 1,08,000 செலவில் கட்டப்படும் இரு பாலங்களுக்கு 17-ந் தேதி அமைச்சர் கக்கன் கால்கோள் விழாவாற்றினர்.

(ந.நி)

ஜவ்வரிசிக்கு வர்ணம் தீட்டுதல்

சென்னை சர்க்கார் தடை

சேலம், அக். 17—

ஜவ்வரிசித் தொழிலின் சென்னை மாநில ஆலோசனை போர்டு கூட்டம் 16-ந் தேதி மாலை போர்டின் செயலாளரும், சேலம் கைத்தொழில இலாகா உதவி டைரக்டருமான திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

காப்புவரி போர்டின் யோசனைகளை ஏற்று ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் கூறப்பட்டது.

ஜவ்வரிசிக்கு வர்ணம் கொடுக்கக் கூடாதென்று மாநில அரசாங்கம் விதித்துள்ள உத்தரவு கூட்டத்தில் படித்துக் காட்டப்பட்டது. மற்ற மாநிலங்களிலும் ஜவ்வரிசிக்கு வர்ணம் கொடுக்கக் கூடாது என்று தடைவிதித்த சட்டமியற்றுமாறு இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேறியது.

ஜவ்வரிசித் தொழில் பற்றி புள்ளி விவரங்கள் தெரிந்துகொள்ள ஜவ்வரிசி வியாபாரிகள் தங்கள் கணக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (ந—நி)

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்

நவ. 6-ந் தேதி திறக்கப்படும்

சேலம், அக். 17—

சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி தாலுகாவில் கட்டப்பட்டுவரும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்க வேலை முடிவடைந்துவிட்டது. இந்த நீர்த் தேக்கத்தை சென்னை முதலமைச்சர் காமராசர் நவம்பர் திங்கள் 6-ந் தேதியன்று ஆரம்பித்து வைப்பார் என்று தெரியவருகிறது.

இந்த நீர்த்தேக்கத்தில் சென்ற வாரம் 40 அடி உயரத்திற்கு தண்ணீர் இருந்தது. (ந. நி.)

சேலம் மாவட்ட நூல் நிலயம் பெண்கள் பகுதி துவக்கம்

சேலம், அக். 20—

சேலம் மாவட்ட நடுவண் நூல் நிலயத்தில் பெண்கள் பகுதியை அமைச்சர் லூர்து அம்மையார் 19-ந் தேதி மாலை ஆரம்பித்து வைத்தார். இந்தக் கூட்டத்திற்கு சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. மதுரைப் பிள்ளை தலைமை வகித்தார். நூல் நிலயக்குழுத் தலைவர் டி. கிருஷ்ண மூர்த்தி (கவுண்டர்) எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்,

மலேயாவிலிருந்து நாடு கடத்தப்பட்டோர்

மீண்டும் அழைத்துக்கொள்ளக் கோரிக்கை

மலேயாவிலிருந்து நாடு கடத்தப்பட்டோர் சங்கஉறுப்பினர்கள் கூட்டம் 10—10—57-ல், சென்னை-பொம்பூரில் நடைபெற்றது.

சுதந்தர மலேயாவை வரவேற்றும் வாழ்த்தியும், அவசர காலச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமெனக் கோரியும், அந்தச் சட்டத்தின்கீழ் நாடுகடத்தப்பட்டோர்களை மலேயாவிற்குத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மலேயாவிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்கள் அவரவர்கள் முகவரிகளையும், ஆலோசனைகளையும்—'வி. அருணசலம், 32/12 சுப்பராய செட்டி 3-வது தெரு, சென்னை-12' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மேற்படி சங்கத் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

பொள்ளாச்சியில் அண்ணா

வடநாட்டு ஆட்சியாளரின்போக்கு பற்றி விளக்கம்

பொள்ளாச்சி, அக். 17—

14—10—57 இரவு 9-30 மணியளவில் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில், கண்கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் செயலாளர் தோழர் பி. என். இராமனுசம் தலைமையில் துவங்கியது.

தலைவர் முன்னுரைக்குப்பின் அண்ணா அவர்கள் நீண்ட கையொலிக்கிடையே எழுந்து திராவிட நாட்டுப் பிரிவினை, இந்தியை நுழைக்கும் வடநாட்டு ஆட்சியாளர்களின் போக்கு, தி. மு. கழகம் மக்களுக்கு ஆற்றிவரும் தொண்டு ஆகியவை பற்றி இரவு 12 மணி வரை சொற்பொழிவாற்றினார்.

அண்ணாவிற்குப் பல பொதுநல மன்றங்கள், கழகங்கள் சார்பாக மலர்மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

பீடித் தொழிலாளர்கள் சார்பாக அண்ணாவுக்கு 1,001 சாலணாக்கள் கொண்ட அழகிய வேலைப்பாடு கொண்ட மாலை ஒன்றும் அணிவிக்கப்பட்டது.

பதினைந்தாயிரத்திற்கும் மேலாக மக்கள் கூடியிருந்து, அண்ணாவின் சொற்பொழிவைக் கேட்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் ஏராளமான குழந்தைகளுக்கு அண்ணா அவர்களால் பெயர் சூட்டப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது.

வெளிப்படையாகக் கூறும் காரணம் இது!

சந்திகார், அக். 21—

பஞ்சாப் மாநிலத்திலிருந்து தேவைக்கு அதிகமாக உள்ள அரிசியை வெளிப்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்க உணவு இலாகாவிற்காக பஞ்சாப் அரசாங்கம் அரிசியைக் கொள்முதல் செய்துவருகிறதாம்; பற்றாக்குறை பகுதிகளுக்கு உதவிபுரிய வேண்டும் என்றும் பஞ்சாப் விரும்புகிறதாம்.

சிதம்பரம் வட்டத்தில் மு. கருணாநிதி கே. ஏ. மதியழகன் தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

2—11—57, 3—11—57

சனி, ஞாயிறு நாட்களில் சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த அண்ணாமலை நகர், காட்டுமன்னார்குடி, குமராட்சி, வல்லம் படுகை, வட்டத்தூர் முதலிய ஊர்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன் ஆகியோர் கலந்துகொள்வர். விரிவான சுற்றுப்பயண நிகழ்ச்சி பின்னர் அறிவிக்கப்படும்.

'சோழ மன்னர்கள் திட்டமிட்டிருந்தனர்'

மேட்டூர் அணைபற்றி டாக்டர் சி. பி. இராமசாமி

தஞ்சை, அக். 21—

இப்போது மேட்டூர் அணை உள்ள இடத்திலேயே சோழ மன்னர்கள் ஒரு அணைகட்டத் திட்டமிட்டிருந்தனர் என்றும், இதற்கான ஆதாரங்கள் சமீபத்தில் கிடைத்துள்ளன என்றும் டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், தஞ்சை நகரசபை வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இரகசியக் குறிப்புகள்

புதுடில்லி, அக். 23—

இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை பண்டித நேரு மாநில முதலமைச்சர்களுக்கு இரகசிய மடல் வரைகிறார் என்றும், இத்தகைய இரகசியக் கடிதங்கள், அரசாங்கக் குறிப்புகளிலும் பத்திரிக்கைகளிலும் வெளியாகி விடுகின்றன வென்றும் கூறப்பட்டிருக்கிறது.

"ஏதோ ஒரு புதிய செய்தியை வெளியிட வேண்டும் என்று இவ்வாறு செய்வது பொறுப்பற்றது; சட்ட விரோதமானது"

என்று பண்டித நேரு எச்சரித்து, 'இனி அரசாங்கத்தின் இரகசியக் குறிப்புகளை வெளியிடுவோர்மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள்

கேட்டது ரூ. 1கோடி; கிடைத்ததோ ரூ. 60 இலட்சம்!

ஐதராபாத், அக். 21—

ஆந்திர மாநிலத்தில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ. 60 இலட்சம் வரை நிதி உதவ மத்திய சர்க்கார் சம்மதித்துவிட்டதாக மந்திரி நரசிங்கராவ் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், மாநில சர்க்கார் கேட்டிருந்ததோ ஒரு கோடி ரூபாய் என்றும், இதில் ரூ. 60 இலட்சம் மட்டுமே டெல்லி சம்மதித்ததாகவும் அவர் கூறியிருக்கிறார்.

குளித்தலை விவசாயிகள்..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மீது 70-க்கு மேற்பட்ட வழக்குகளை குளித்தலை போலீசார் பதிவு செய்திருந்தனர்.

★

நன்றி அறிவிப்பு

"வழக்குகளை வாபஸ் பெற உறுதுணையாயிருந்த அதிகாரிகளுக்கும் சர்க்காருக்கும் என் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று, குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர் தோழர் நீ. வீ. முத்துக்கிருஷ்ணன் தெரிவித்துக்கொள்கிறார்.

நம்பூதிரிபாத்-அன்றும் இன்றும்!

காலடி, அக். 21—

"அகில இந்திய சோஷலிஸ்ட் கட்சியின் ஒரு ஊழியனாக கடந்த இரண்டு தலைமுறைகளாக நான் பணியாற்றியிருக்கிறேன்; அப்போதெல்லாம் நான், 'நஷ்டஈடு இன்றியே நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்கவேண்டும்' என்ற கொள்கையைப் போதித்து வந்திருக்கிறேன்.

"ஆனால் இன்று நிலைமை வேறு; நான், அரசியல் சட்ட விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியுள்ளது; எனவே, நஷ்டஈடு தந்துதான் நிலப்பிரபுக்களை ஒழிக்கமுடிகிறது. இப்படிச் செய்தாவது நிலப்பிரபுத்துவத்தை ஒழித்தாலன்றி எங்கள் மாநிலம் முன்னேற முடியாது எனக் கருதுகிறேன்"

என்பதாக, கேரள முதல் மந்திரி நம்பூதிரிபாத், இங்கு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகள்

சர்க்காரெடுத்து நடத்துவதற்கில்லை

பம்பாய் மந்திரி விளக்கம்

'பம்பாய் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்தை சர்க்கார் ஏற்று நடத்த உத்தேசித்திருப்பதாக வெளிவந்த செய்திகள் உண்மையல்ல' என்று பம்பாய் கல்வி மந்திரி ஹிதேந்திர தேசாய் தெரிவித்திருக்கிறார்.

'சாதாரணமாக ஆரம்பக் கல்வி அளிக்கும் விஷயத்திலேயே சர்க்கார் நிதி நெருக்கடி காரணமாகக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கும் போது, இதுபோன்ற உயர்நிலைப் பள்ளிகளை எடுத்து நடத்துவது என்பதை எண்ணிப்பார்ப்பதற்கே இல்லை' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 'பாடப் புத்தகங்கள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுவதை, மாணவர்களின் பெற்றோர்களின் பொருளாதார நிலையைக் கருதி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றுவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் நோக்கமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பள்ளிகளில் பகல் உணவு!

கல்வி அமைச்சர் தகவல்

விருதை, அக். 23—

"சென்னை மாநிலத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் ஏழைகளுக்குப் பகல் உணவு அளிக்கும் திட்டம், வரும் நவம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது"

என்று, சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளதாம்; இதையும் கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

விருதையில் ஹாஜி சையத் முகம்மதின் பள்ளி கட்டிட விழாவில் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்க நிர்வாகிகள்

சென்னை, அக். 21—

தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்: தலைவர்: திரு. எஸ். எஸ். ஆள்வாரப்பன்; துணைத் தலைவர்கள் என். இராமமூர்த்தி, திரு. எஸ். ஆர். துரைராசன்; பொருளாளர்: வி. எஸ். கோவிந்தன்.

சென்னை நகர வாக்காளர் பட்டியல்

★

சென்னை நகர வாக்காளர் பட்டியலின் திருத்தப் பதிப்பு வெளியிடுவதுபற்றிய தவணையை நீடித்து, சென்னை அரசாங்கம், கீழ்க்கண்ட விவரங்களை அறிவித்துள்ளது:—

பூர்வாங்க வாக்காளர் பட்டியல் வெளியீடு: 12—11—57

வாக்காளர்கள் திருத்தம் கோரியும், மறுப்புரை எழுப்பியும் மனுச்செய்து கொள்ளும் கடைசி நாள்: 3—12—57

இறுதியாகத் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள்: 31—12—57

சென்னை நகர தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள்—படிப்பகங்கள் ஆகியவைகளைச் சேர்ந்த நிர்வாகிகளும்—தோழர்களும் தங்கள் தங்களுடையவும், தங்களைச் சார்ந்த தோழர்களுடையவும் பெயர் முகவரி, இன்னும் மற்ற விவரங்களும் வாக்காளர் பட்டியலில் சரியாக உள்ளனவா என்பதை 3—12—57-க்கு முன்பாக சரிபார்த்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொண்டு தகுதியான வாக்காளர்களாக ஆகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கிருஷ்ணமாச்சாரியின் நாத்திகத்துக்கு!

வாய்தவறி வந்துவிட்ட வாசகமாம்

பண்டிதரின் சப்பைக்கட்டு

புதுடில்லி, அக். 21—

"இந்தியாவில் தொழில்களை புரட்சி காண பெறும், இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ரஷ்யாவும், சீனாவும் உதவும் என்று கிருஷ்ணமாச்சாரி கூறியிருப்பாரானால், அது ஒரு வாய் தவறி வந்துவிட்ட வாசகம். உண்மையில், இந்தியாவிற்கு, ரஷ்ய — சீன நாடுகளுடன் மிகுந்த சிநேகபாவமான உறவு தான் உண்டு.

"கிருஷ்ண மாச்சாரி கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பவரல்ல என்பதும் உண்மைதான்"

என்பதாகப் பண்டித நேரு, சப்பைக்கட்டு வேலையில் ஈடுபட்டாராம்!

உடனே ஒரு நிருபர் குறுக்கிட்டு, 'கிருஷ்ணமாச்சாரியார் கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பவரல்ல என்பதே, இந்தியாமீது ரஷ்யாவும் சீனாவும் படையெடுக்கும் என்று கூறியதைத் தீயதாய் படுத்தாதா?' என்று கேட்டிருக்கிறார்.

பதிலளித்த பண்டிதர் 'அது தான் எனக்கு ஆச்சரியமாகயிருக்கிறது; நான் நினைக்கிறேன்—கிருஷ்ணமாச்சாரியார், தத்துவ ரீதியான விளக்கத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று.'

தவறவில்லை

கிருஷ்ணமாச்சாரியைப் பேட்டிகண்ட அமெரிக்கப் பத்திரிகை (நியூயார்க் டைம்ஸ்) யின் நிருபர், தாம், கிருஷ்ணமாச்சாரியின் விளக்கத்தைத் தவறுதலாகப் பிரசுரிக்கவில்லை என்று எடுத்துரைத்தார்.

உலகப்போர் வருமாம்!

'பிராவ்தா' கூற்று

மாஸ்கோ, அக். 23—

'சிரியாவைத் துருக்கி தாக்கினால் ரஷ்யா பார்த்துக்கொண்டிருக்காது' என்று 'பிராவ்தா' தெரிவித்துள்ளது.

மேலும், 'பெரிய போராகப் பரவக்கூடும்' என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை—

கொருக்குப்பேட்டை
(5-வது வட்டம்)
கிருட்டினசாமிப்பிள்ளைத் தோட்டத் திடலில்
(தியாகராயர் கல்லூரி உணவு விடுதி அருகில்)
25—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். வி. நடராசன்
பேசுவோர்:
அண்ணா
க. அறிவழகன்
பி. எம். கருணாகரன்

★

குளத்தூர்:
(பரமக்குடி வட்டம்)
பாண்டியன் திடலில்
25—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. புகழேந்தி
பேசுவோர்:
முத்தையா
போ. முனியையா
பி. இராமு, மு. நாராயணன்

★

பழையகும்மிடிப்பூண்டி:
கடைத் தெருவில்
25—10—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஆ. கிருஷ்ணன்
பேசுவோர்:
என். சிவரத்தினம்
தா. எல்லப்பன்
கலைமணி
ஏ. இராதாமணாளன்
சி. புலியரசு
மாலை 3-மணிக்கு ஊர்வலம் உண்டு

★

நெல்லிக்குப்பம்:
வெற்றிலை மார்க்கெட் திடலில்
(ஜம்புலிங்கம் பூங்கா பின்புறம்)
25—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: துரை. எத்திராசன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
24: கிளாநூர்
25: கொருக்குப்பேட்டை
26: சென்னை—மயிலாப்பூர்
27: நாகப்பட்டினம்
29: சென்னை—புரசைவாக்கம்
30: கோடம்பாக்கம்
நவ.
1: கூடுவாஞ்சேரி

தென்னிந்தியக் கலைத் தொழிலாளர் சங்கம்

24—10—57 காலை 9-30 மணிக்கு மேற்படி சங்கத்தின் விசேடப் பேரவைக் கூட்டம் சங்க அலுவலகத்தில் (149, லாயிட்ஸ் ரோடு, சென்னை-14.) நடைபெறும். தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், பிரண்டு இராமசாமி, டி. சா. கிருஷ்ணமூர்த்தி, எஸ். டி. சுந்தரம், என். எஸ். நாராயண பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு சங்க வளர்ச்சிக்கான ஆய்வுரை வழங்கி சொற்பொழிவாற்றுவர்.

இளைஞர் மன்றத் திறப்புவிழா

25—10—57 மாலை 6 மணிக்கு சென்னை செல்லிஸ் உமா டாக்கீஸ் அருகில், தோழர் டி. நாராயணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் அன்பழகன் எம். எல். ஏ; ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ரூ. 45 கோடி சேதம்!

கெய்ரோ, அக். 23—

எகிப்து மீது சென்ற ஆண்டு நவம்பரில் பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் முதலிய நாடுகள் நடத்திய தாக்குதல்களினால் மொத்தம் ரூ. 45 கோடி மதிப்புக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

சூயஸ்கால்வாய் நிறுவனம் இதை மதிப்பிட்டுள்ளது; இதை எகிப்திய நஷ்டஈடு குழு அங்கீகரித்துள்ளது.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; கீழ்க்கண்டவர்கள் விண்ணப்பித்துக் கொள்க:—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி: 'நம் நாடு'

'நம் நாடு' விற்பனையாளர்கள்

★

மதுராந்தகத்தில்:
திரு. ஏ. ஆறுமுகம், பெட்டிக்கடை, மதுராந்தகம் அஞ்சல் (செங்கற்பட்டு மாவட்டம்)

★

போடிநாயக்கனூரில்:
திரு. டி. பொன்னுசாமி, C/O போஸ் வெற்றிலைப் பாக்குக் கடை, மேலக்கடைத் தெரு, போடிநாயக்கனூர் (மதுரை மாவட்டம்)

★

பாலையூரில்:
திரு. பி. கே. கணேசன், கீழத்தெரு, பாலையூர் அஞ்சல், பேரளம் வழி (தஞ்சை மாவட்டம்)

★

திருவள்ளூரில்:
திரு. டி. எத்திராசன், C/O எம். கே. ஜி. சாமி, தையற்கடை, கொண்டமாபுரம் தெரு, திருவள்ளூர் அஞ்சல் (செங்கற்பட்டு மாவட்டம்)

துருக்கியை ரஷ்யா வற்புறுத்துவதேன்?

மற்றொரு காரணம் வெளியாகிறது

வாஷிங்டன், அக். 21—

துருக்கிமீது ரஷ்யா ஏற்படுத்தியுள்ள பொருளாதார—இராணுவக் கட்டுப்பாடுகளுக்கு மற்றொரு காரணம் வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டாண்டுக் காலமாக அமெரிக்கா, தனது 'ராடார்' கருவி மூலம் துருக்கியிலிருந்து ரஷ்ய ராக்கெட் (பறக்கும் குண்டுகள்) பற்றித் தகவல் சேகரித்து வருகிறதாம். இந்த 'ராடார்' கருவிகள் துருக்கியில் பொருத்தப்பட்டுள்ளது பற்றிதான் காரணம் என்ற தகவலை 'ஏவியேஷன் வீக்' என்ற ஏடு வெளியிட்டுள்ளது.

ரஷ்யா, பறக்கும் குண்டுகளை சென்ற ஆண்டு இறுதியில் சோதனை செய்யத் தொடங்கியது என்றும், 4,000 மைல் தூரம் செல்லக்கூடிய குண்டுகள் உள்பட பலவகைக் குண்டுகள் வெடிக்கப்பட்டன என்றும் அமெரிக்க 'ராடார்'கள் தகவல் சேகரித்துள்ளனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.